Tiruppavai
திருப்பாவை

PASURAM

1 மார்கழித் திங்கள் மதிநிறைந்த நன்னாளால்;
நீராடப் போதுவீர்! போதுமினோ, நேரிழையீர்!
சீர்மல்கும் ஆய்ப்பாடிச் செல்வச் சிறுமீர்காள்!
கூர்வேல்-கொடுந் தொழிலன் நந்தகோ பன்குமரன்,
ஏரார்ந்த கண்ணி யசோதை இளஞ்சிங்கம்,
கார்மேனிச் செங்கண் கதிர்மதியம் போல்முகத்தான்
நாரா யணனே, நமக்கே பறைதருவான்,
பாரோர் புகழப் படிந்தேலோ ரெம்பாவாய்.

Maarkazhidh thingkal madhiniraintha nannaalaal;
Neeraadab podhuveer! podhumino, nerizhaiyeer!
Seermalkum aayppaadis selvas sirumeerkaal!
Koorvel-kodun thozhilan nanthago pankumaran,
Eraarntha kanni yasodhai ilanjsingkam,
Kaarmenis sengkan kadhirmadhiyam polmugadhthaan
Naaraa yanane, namagke paraidharuvaan,
Paaror pugazhab padinthelo rempaavaay.

2 வையத்து வாழ்வீர்காள்! நாமும்நம் பாவைக்குச்
செய்யும் கிரிசைகள் கேளீரோ: பாற்கடலுள்
பையத் துயின்ற பரமன் அடிபாடி.
நெய்யுண்ணோம்; பாலுண்ணோம்; நாட்காலே நீராடி,
மையிட் டெழுதோம்; மலரிட்டு நாம்முடியோம்;
செய்யா தனசெய்யோம்; தீக்குறளை சென்றோதோம்;
ஐயமும் பிச்சையும் ஆந்தனையும் கைகாட்டி
உய்யுமா றெண்ணி உகந்தேலோ ரெம்பாவாய்.

Vaiyadhthu vaazhveerkaal! naamumnam paavaigkus
Seyyum kirisaigal keleero: paarkadalul
Paiyadh thuyinra paraman adibaadi.
Neyyunnom; paalunnom; naadkaale neeraadi,
Maiyid tezhudhom; malaridtu naammudiyom;
Seyyaa thanaseyyom; theegkuralai senrodhom;
Aiyamum pissaiyum aanthanaiyum kaigaadti
Uyyumaa renni uganthelo rempaavaay.

3 ஓங்கி உலகளந்த உத்தமன் பேர்பாடி
நாங்கள்நம் பாவைக்குச் சாற்றிநீர் ஆடினால்,
தீங்கின்றி நாடெல்லாம் திங்கள்மும் மாரிபெய்து
ஓங்கு பெருஞ்செந்நெ லூடு கயல்உகளப்
பூங்குவளைப் போதில் பொறிவண்டு கண்படுப்ப,
தேங்காதே புக்கிருந்து சீர்த்த முலைபற்றி
வாங்கக் குடம்நிறைக்கும் வள்ளல்-பெரும்பசுக்கள்
நீங்காத செல்வம் நிறைந்தேலோ ரெம்பாவாய்.

Ongki ulagalantha udhthaman perpaadi
Naangkalnam paavaigkus saarrineer aadinaal,
Theengkinri naadellaam thingkalmum maaribeythu
Ongku perunjsenne loodu kayalugalab
Poongkuvalaib podhil porivantu kanpadubpa,
Thengkaadhe pugkirunthu seerttha mulaibarri
Vaangkag kudamniraigkum vallal-perumpasugkal
Neengkaadha selvam nirainthelo rempaavaay.

4 ஆழி மழைக்கண்ணா! ஒன்றும் நீ கை கரவேல்;
ஆழியுள் புக்கு முகந்துகொ டார்த்தேறி,
ஊழி முதல்வன் உருவம்போல் மெய்கறுத்துப்
பாழியந் தோளுடைப் பற்பநா பன்கையில்
ஆழிபோல் மின்னி, வலம்புரிபோல் நின்றதிர்ந்து,
தாழாதே சார்ங்கம் உதைத்த சரமழைபோல்,
வாழ உலகினில் பெய்திடாய், நாங்களும்
மார்கழிநீ ராட மகிழ்ந்தேலோ ரெம்பாவாய்.

Aazhi mazhaigkannaa! onrum nee kai karavel;
Aazhiyul pugku muganthugo taarttheri,
Oozhi mudhalvan uruvampol meykarudhthub
Paazhiyan tholudaib parpanaa pankaiyil
Aazhibol minni, valampuribol ninradhirnthu,
Thaazhaadhe saarngkam udhaidhtha saramazhaibol,
Vaazha ulaginil peythidaay, naangkalum
Maarkazhinee raada magizhnthelo rempaavaay.

5 மாயனை மன்னு வடமதுரை மைந்தனை,
தூய பெருநீர் யமுனைத் துறைவனை,
ஆயர் குலத்தினில் தோன்றும் அணிவிளக்கை,
தாயைக் குடல்விளக்கம் செய்ததா மோதரனை,
தூயோமாய் வந்துநாம் தூமலர்தூ வித்தொழுது
வாயினால் பாடி மனத்தினால் சிந்திக்க,
போய பிழையும் புகுதருவான் நின்றனவும்
தீயினில் தூசாகும் செப்பேலோ ரெம்பாவாய்.

Maayanai mannu vadamadhurai mainthanai,
Thooya peruneer yamunaidh thuraivanai,
Aayar kuladhthinil thonrum anivilagkai,
Thaayaig kudalvilagkam seythadhaa modharanai,
Thooyomaay vanthunaam thoomalarthoo vidhthozhudhu
Vaayinaal paadi manadhthinaal sinthigka,
Poya pizhaiyum pugudharuvaan ninranavum
Theeyinil thoosaagum sebpelo rempaavaay.

6 புள்ளும் சிலம்பினகாண்; புள்ளரையன் கோயிலில்
வெள்ளை விளிசங்கின் பேரரவம் கேட்டிலையோ?
பிள்ளாய்! எழுந்திராய், பேய்முலை நஞ்சுண்டு,
கள்ளச் சகடம் கலக்கழியக் காலோச்சி,
வெள்ளத் தரவில் துயிலமர்ந்த வித்தினை
உள்ளத்துக் கொண்டு முனிவர்களும் யோகிகளும்
மெள்ள எழுந்து அரியென்ற பேரரவம்
உள்ளம் புகுந்து குளிர்ந்தேலோ ரெம்பாவாய்

Pullum silampinagaan; pullaraiyan koyilil
Vellai vilisangkin peraravam kedtilaiyo?
Pillaay! ezhunthiraay, peymulai nanjsuntu,
Kallas sagadam kalagkazhiyag kaalossi,
Velladh tharavil thuyilamarntha vidhthinai
Ulladhthug kontu munivarkalum yogigalum
Mella ezhunthu ariyenra peraravam
Ullam pugunthu kulirnthelo rempaavaay

7 கீசுகீ சென்றெங்கும் ஆனைச்சாத் தம்கலந்து
பேசின பேச்சரவம் கேட்டிலையோ? பேய்ப்பெண்ணே!
காசும் பிறப்பும் கலகலப்பக் கைபேர்த்து
வாச நறுங்குழல் ஆய்ச்சியர் மத்தினால்
ஓசை படுத்த தயிரரவம் கேட்டிலையோ?
நாயகப் பெண்பிள்ளாய்! நாரா யணன்மூர்த்தி
கேசவனைப் பாடவும்நீ கேட்டே கிடத்தியோ?
தேச முடையாய்! திறவேலோ ரெம்பாவாய்.

Keesugee senrengkum aanaissaadh thamkalanthu
Pesina pessaravam kedtilaiyo? peyppenne!
Kaasum pirabpum kalagalabpag kaibertthu
Vaasa narungkuzhal aayssiyar madhthinaal
Osai padudhtha thayiraravam kedtilaiyo?
Naayagab penpillaay! naaraa yananmoortthi
Kesavanaib paadavumnee kedte kidadhthiyo?
Thesa mudaiyaay! thiravelo rempaavaay.

8 கீழ்வானம் வெள்ளென்று, எருமை சிறுவீடு
மேய்வான் பரந்தனகாண்: மிக்குள்ள பிள்ளைகளும்
போவான்போ கின்றாரைப் போகாமல் காத்துன்னைக்
கூவுவான் வந்து நின்றோம். கோது கலமுடைய
பாவாய்! எழுந்திராய்; பாடிப் பறைகொண்டு
மாவாய் பிளந்தானை, மல்லரை மாட்டிய
தேவாதி தேவனைச் சென்றுநாம் சேவித்தால்
ஆவாவென் றாராய்ந் தருளேலோ ரெம்பாவாய்.

Keezhvaanam vellenru, erumai siruveedu
Meyvaan paranthanagaan: migkulla pillaigalum
Povaanpo kinraaraib pogaamal kaadhthunnaig
Koovuvaan vanthu ninrom. kodhu kalamudaiya
Paavaay! ezhunthiraay; paadib paraigontu
Maavaay pilanthaanai, mallarai maadtiya
Thevaadhi thevanais senrunaam sevidhthaal
Aavaaven raaraayn tharulelo rempaavaay.

9 தூமணி மாடத்துச் சுற்றும் விளக்கெரிய,
தூபங் கமழத் துயிலணைமேல் கண்வளரும்
மாமான் மகளே! மணிக்கதவம் தாள்திறவாய்;
மாமீர்! அவளை எழுப்பீரோ? உம்மகள்தான்
ஊமையோ? அன்றிச் செவிடோ? அனந்தலோ?
ஏமப் பெருந்துயில் மந்திரப் பட்டாளோ?
'மாமாயன், மாதவன், வைகுந்தன்' என்றென்று
நாமம் பலவும் நவின்றேலோ ரெம்பாவாய்.

Thoomani maadadhthus surrum vilagkeriya,
Thoobang kamazhadh thuyilanaimel kanvalarum
Maamaan magale! manigkadhavam thaalthiravaay;
Maameer! avalai ezhubpeero? ummagalthaan
Oomaiyo? anris sevido? ananthalo?
Emab perunthuyil manthirab padtaalo?
'maamaayan, maadhavan, vaigunthan' enrenru
Naamam palavum navinrelo rempaavaay.

10 நோற்றுச் சுவர்க்கம் புகுகின்ற அம்மனாய்!
மாற்றமும் தாராரோ வாசல் திறவாதார்?
நாற்றத் துழாய்முடி நாரா யணன்நம்மால்
போற்றப் பறைதரும் புண்ணியனால் பண்டொருநாள்
கூற்றத்தின் வாய்வீழ்ந்த கும்ப கரணனும்
தோற்றும் உனக்கே பெருந்துயில்தான் தந்தானோ?
ஆற்ற அனந்தல் உடையாய்! அருங்கலமே!
தேற்றமாய் வந்து திறவேலோ ரெம்பாவாய்

Norrus suvarkkam puguginra ammanaay!
Maarramum thaararo vaasal thiravaadhaar?
Naarradh thuzhaaymudi naaraa yanannammaal
Porrab paraidharum punniyanaal pantorunaal
Koorradhthin vaayveezhntha kumpa karananum
Thorrum unagke perunthuyilthaan thanthaano?
Aarra ananthal udaiyaay! arungkalame!
Therramaay vanthu thiravelo rempaavaay

11 கற்றுக் கறவைக் கணங்கள் பலகறந்து
செற்றார் திறலழியச் சென்று செருச்செய்யும்
குற்றமொன் றில்லாத கோவலர்தம் பொற்கொடியே!
புற்றர வல்குல் புனமயிலே! போதராய்.
சுற்றத்துத் தோழிமார் எல்லாரும் வந்துநின்
முற்றம் புகுந்து முகில்வண்ணன் பேர்பாட,
சிற்றாதே பேசாதே செல்வப்பெண் டாட்டி! நீ
எற்றுக் குறங்கும் பொருளேலோ ரெம்பாவாய்.

Karrug karavaig kanangkal palagaranthu
Serraar thiralazhiyas senru serusseyyum
Kurramon rillaadha kovalartham porkodiye!
Purrara valkul punamayile! podharaay.
Surradhthudh thozhimaar ellaarum vanthunin
Murram pugunthu mugilvannan perpaada,
Sirraadhe pesaadhe selvabpen taadti! nee
Errug kurangkum porulelo rempaavaay.

12 கனைத்திளங் கற்றெருமை கன்றுக் கிரங்கி
நினைத்து முலைவழியே நின்றுபால் சோர
நனைத்தில்லம் சேறாக்கும் நற்செல்வன் தங்காய்!
பனித்தலை வீழநின் வாசற் கடைபற்றிச்
சினத்தினால் தென்னிலங்கைக் கோமானைச் செற்ற
மனத்துக் கினியானைப் பாடவும், நீ வாய்திறவாய்!
இனித்தான் எழுந்திராய்: ஈதென்ன பேருறக்கம்?
அனைத்தில்லத் தாரும் அறிந்தேலோ ரெம்பாவாய்.

Kanaidhthilang karrerumai kanrug kirangki
Ninaidhthu mulaivazhiye ninrubaal sora
Nanaidhthillam seraagkum narselvan thangkaay!
Panidhthalai veezhanin vaasar kadaibarris
Sinadhthinaal thennilangkaig komaanais serra
Manadhthug kiniyaanaib paadavum, nee vaaythiravaay!
Inidhthaan ezhunthiraay: eedhenna peruragkam?
Anaidhthilladh thaarum arinthelo rempaavaay.

13 புள்ளின்வாய் கீண்டானை, பொல்லா அரக்கனைக்
கிள்ளிக் களைந்தானைக் கீர்த்திமை பாடிப்போய்,
பிள்ளைகள் எல்லாரும் பாவைக் களம்புக்கார்,
வெள்ளி எழுந்து, வியாழம் உறங்கிற்று:
புள்ளும் சிலம்பினகாண்: போதரிக் கண்ணினாய்!
குள்ளக் குளிரக் குடைந்துநீ ராடாதே,
பள்ளிக் கிடத்தியோ? பாவாய்! நீ நன்னாளால்
கள்ளம் தவிர்ந்து கலந்தேலோ ரெம்பாவாய்.

Pullinvaay keentaanai, pollaa aragkanaig
Killig kalainthaanaig keertthimai paadibpoy,
Pillaigal ellaarum paavaig kalampugkaar,
Velli ezhunthu, viyaazham urangkirru:
Pullum silampinagaan: podharig kanninaay!
Kullag kulirag kudainthunee raadaadhe,
Pallig kidadhthiyo? paavaay! nee nannaalaal
Kallam thavirnthu kalanthelo rempaavaay.

14 உங்கள் புழைக்கடைத் தோட்டத்து வாவியுள்
செங்கழுநீர் வாய்நெகிழ்ந்(து) ஆம்பல்வாய் கூம்பினகாண்;
செங்கல்-பொடிக்கூறை வெண்பல்-தவத்தவர்,
தங்கள் திருக்கோயில் சங்கிடுவான் போகின்றார்;
எங்களை முன்னம் எழுப்புவான் வாய்பேசும்
நங்காய்! எழுந்திராய், நாணாதாய்! நாவுடையாய்!
சங்கொடு சக்கரம் ஏந்தும் தடக்கையன்
பங்கயக் கண்ணானைப் பாடேலோ ரெம்பாவாய்.

Ungkal puzhaigkadaidh thodtadhthu vaaviyul
Sengkazhuneer vaaynegizhn(thu) aampalvaay koompinagaan;
Sengkal-podigkoorai venpal-thavadhthavar,
Thangkal thirugkoyil sangkiduvaan poginraar;
Engkalai munnam ezhubpuvaan vaaypesum
Nangkaay! ezhunthiraay, naanaadhaay! naavudaiyaay!
Sangkodu sagkaram enthum thadagkaiyan
Pangkayag kannaanaib paadelo rempaavaay.

15 'எல்லே இளங்கிளியே; இன்னம் உறங்குதியோ?'
'சில்லென் றழையேன்மின், நங்கைமீர்! போதர்கின்றேன்'
'வல்லை, உன் கட்டுரைகள்! பண்டேஉன் வாயறிதும்!'
'வல்லீர்கள் நீங்களே, நானேதான் ஆயிடுக!'
'ஒல்லைநீ போதாய், உனக்கென்ன வேறுடையை?'
'எல்லாரும் போந்தாரோ?' போந்தார், போந்தெண்ணிக்கொள்';
வல்லானை கொன்றானை, மாற்றாரை மாற்றழிக்க
வல்லானை, மாயனைப் பாடேலோ ரெம்பாவாய்.

'elle ilangkiliye; innam urangkudhiyo?'
'sillen razhaiyenmin, nangkaimeer! podharkinren'
'vallai, un kadturaigal! panteun vaayaridhum!'
'valleerkal neengkale, naanedhaan aayiduga!'
'ollainee podhaay, unagkenna verudaiyai?'
'ellaarum ponthaaro?' ponthaar, ponthennigkol';
Vallaanai konraanai, maarraarai maarrazhigka
Vallaanai, maayanaib paadelo rempaavaay.

16 நாயக னாய்நின்ற நந்தகோ பனுடைய
கோயில்காப் பானே! கொடித்தோன்றும் தோரண
வாயில்காப் பானே; மணிக்கதவம் தாள்திறவாய்,
ஆயர் சிறுமிய ரோமுக்கு அறைபறை
மாயன் மணிவண்ணன் நென்னலே வாய்நேர்ந்தான்,
தூயோமாய் வந்தோம், துயிலெழப் பாடுவான்;
வாயால் முன்னமுன்னம் மாற்றாதே அம்மா நீ
நேய நிலைக்கதவம் நீக்கேலோ ரெம்பாவாய்.

Naayaga naayninra nanthago panudaiya
Koyilkaab paane! kodidhthonrum thorana
Vaayilkaab paane; manigkadhavam thaalthiravaay,
Aayar sirumiya romugku araibarai
Maayan manivannan nennale vaaynernthaan,
Thooyomaay vanthom, thuyilezhab paaduvaan;
Vaayaal munnamunnam maarraadhe ammaa nee
Neya nilaigkadhavam neegkelo rempaavaay.

17 அம்பரமே, தண்ணீரே, சோறே அறஞ்செய்யும்
எம்பெருமான் நந்தகோ பாலா! எழுந்திராய்;
கொம்பனார்க் கெல்லாம் கொழுந்தே குலவிளக்கே!
எம்பெரு மாட்டி! யசோதாய்! அறிவுறாய்;
அம்பரம் ஊடறுத் தோங்கி உலகளந்த
உம்பர்கோ மானே! உறங்கா தெழுந்திராய்;
செம்பொற் கழலடிச் செல்வா! பலதேவா!
உம்பியும் நீயும் உறங்கேலோ ரெம்பாவாய்.

Amparame, thanneere, sore aranjseyyum
Emperumaan nanthago paalaa! ezhunthiraay;
Kompanaark kellaam kozhunthe kulavilagke!
Emperu maadti! yasodhaay! arivuraay;
Amparam oodarudh thongki ulagalantha
Umparko maane! urangkaa thezhunthiraay;
Sempor kazhaladis selvaa! paladhevaa!
Umpiyum neeyum urangkelo rempaavaay.

18 உந்து மதகளிற்றன், ஓடாத தோள்வலியன்,
நந்தகோ பாலன் மருமகளே, நப்பின்னாய்!
கந்தம் கமழும் குழலீ! கடைதிறவாய்;
வந்தெங்கும் கோழி அழைத்தனகாண்; மாதவிப்
பந்தல்மேல் பல்கால் குயிலினங்கள் கூவினகாண்;
பந்தார் விரலி! உன் மைத்துனன் பேர்பாடச்
செந்தா மரைக்கையால் சீரார் வளையொலிப்ப
வந்து திறவாய், மகிழ்ந்தேலோ ரெம்பாவாய்.

Unthu madhagalirran, odaadha tholvaliyan,
Nanthago paalan marumagale, nabpinnaay!
Kantham kamazhum kuzhalee! kadaidhiravaay;
Vanthengkum kozhi azhaidhthanagaan; maadhavib
Panthalmel palkaal kuyilinangkal koovinagaan;
Panthaar virali! un maidhthunan perpaadas
Senthaa maraigkaiyaal seeraar valaiyolibpa
Vanthu thiravaay, magizhnthelo rempaavaay.

19 குத்து விளக்கெரியக் கோட்டுக்கால் கட்டில்மேல்
மெத்தென்ற பஞ்ச சயனத்தின் மேலேறிக்
கொத்தலர் பூங்குழல் நப்பின்னை கொங்கைமேல்
வைத்துக் கிடந்த மலர்மார்பா! வாய்திறவாய்;
மைத்தடங் கண்ணினாய்! நீஉன் மணாளனை
எத்தனை போதும் துயிலெழ ஒட்டாய்காண்,
எத்தனை யேலும் பிரிவாற்ற கில்லாயால்!
தத்துவம் அன்று தகவேலோ ரெம்பாவாய்.

Kudhthu vilagkeriyag kodtugkaal kadtilmel
Medhthenra panjsa sayanadhthin melerig
Kodhthalar poongkuzhal nabpinnai kongkaimel
Vaidhthug kidantha malarmaarpaa! vaaythiravaay;
Maidhthadang kanninaay! neeun manaalanai
Edhthanai podhum thuyilezha odtaaykaan,
Edhthanai yelum pirivaarra killaayaal!
Thadhthuvam anru thagavelo rempaavaay.

20 முப்பத்து மூவர் அமரர்க்கு முன்சென்று
கப்பம் தவிர்க்கும் கலியே! துயிலெழாய்;
செப்பம் உடையாய்! திறலுடையாய்! செற்றார்க்கு
வெப்பம் கொடுக்கும் விமலா! துயிலெழாய்;
செப்பன்ன மென்முலைச் செவ்வாய்ச் சிறுமருங்குல்
நப்பின்னை நங்காய்! திருவே! துயிலெழாய்!
உக்கமும் தட்டொளியும் தந்துன் மணாளனை
இப்போதே எம்மைநீ ராட்டேலோ ரெம்பாவாய்.

Mubpadhthu moovar amararkku munsenru
Kabpam thavirkkum kaliye! thuyilezhaay;
Sebpam udaiyaay! thiraludaiyaay! serraarkku
Vebpam kodugkum vimalaa! thuyilezhaay;
Sebpanna menmulais sevvaays sirumarungkul
Nabpinnai nangkaay! thiruve! thuyilezhaay!
Ugkamum thadtoliyum thanthun manaalanai
Ibpodhe emmainee raadtelo rempaavaay.

21 ஏற்ற கலங்கள் எதிர்பொங்கி மீதளிப்ப
மாற்றாதே பால்சொரியும் வள்ளற் பெரும்பசுக்கள்
ஆற்றப் படைத்தான் மகனே! அறிவுறாய்!
ஊற்றம் உடையாய்! பெரியாய்! உலகினில்
தோற்றமாய் நின்ற சுடரே! துயிலெழாய்;
மாற்றார் உனக்கு வலிதொலைந்துன் வாசற்கண்
ஆற்றாது வந்துன் அடிபணியு மாபோலே,
போற்றியாம் வந்தோம் புகழ்ந்தேலோ ரெம்பாவாய்.

Erra kalangkal edhirpongki meedhalibpa
Maarraadhe paalsoriyum vallar perumpasugkal
Aarrab padaidhthaan magane! arivuraay!
Oorram udaiyaay! periyaay! ulaginil
Thorramaay ninra sudare! thuyilezhaay;
Maarraar unagku validholainthun vaasarkan
Aarraadhu vanthun adibaniyu maabole,
Porriyaam vanthom pugazhnthelo rempaavaay.

22 அங்கண்மா ஞாலத் தரசர் அபிமான
பங்கமாய் வந்துநின் பள்ளிக்கட் டிற்கீழே
சங்கம் இருப்பார்போல், வந்து தலைப்பெய்தோம்;
கிங்கிணி வாய்ச்செய்த தாமரைப் பூப்போலே,
செங்கண் சிறுச்சிறிதே எம்மேல் விழியாவோ?
திங்களும் ஆதித் தியனும் எழுந்தாற்போல்,
அங்கண் இரண்டுங்கொண் டெங்கள்மேல் நோக்குதியேல்
எங்கள்மேல் சாபம் இழிந்தேலோ ரெம்பாவாய்.

Angkanmaa njaaladh tharasar abimaana
Pangkamaay vanthunin palligkad tirkeezhe
Sangkam irubpaarpol, vanthu thalaibpeythom;
Kingkini vaaysseytha thaamaraib poobpole,
Sengkan sirussiridhe emmel vizhiyaavo?
Thingkalum aadhidh thiyanum ezhunthaarpol,
Angkan irantungkon tengkalmel nogkudhiyel
Engkalmel saabam izhinthelo rempaavaay.

23 மாரி மலைமுழைஞ்சில் மன்னிக் கிடந்துறங்கும்
சீரிய சிங்கம் அறிவுற்றுத் தீவிழித்து
வேரி மயிர்பொங்க எப்பாடும் பேர்ந்துதறி
மூரி நிமிர்ந்து முழங்கிப் புறப்பட்டுப்
போதருமா போலே, நீ பூவைப்பூ வண்ணா! உன்
கோயில்நின் றிங்ஙனே போந்தருளிக் கோப்புடைய
சீரிய சிங்கா சனத்திருந்து யாம்வந்த
காரியம் ஆராய்ந் தருளேலோ ரெம்பாவாய்.

Maari malaimuzhainjsil mannig kidanthurangkum
Seeriya singkam arivurrudh theevizhidhthu
Veri mayirpongka ebpaadum pernthudhari
Moori nimirnthu muzhangkib purabpadtub
Podharumaa pole, nee poovaibpoo vannaa! un
Koyilnin ringngane pontharulig kobpudaiya
Seeriya singkaa sanadhthirunthu yaamvantha
Kaariyam aaraayn tharulelo rempaavaay.

24 'அன்றிவ் வுலகம் அளந்தாய்! அடிபோற்றி,
சென்றங்குத் தென்னிலங்கை செற்றாய்! திறல்போற்றி,
பொன்றச் சகடம் உதைத்தாய்! புகழ்போற்றி
கன்று குணிலா எறிந்தாய்! கழல்போற்றி,
குன்று குடையா எடுத்தாய்! குணம்போற்றி,
வென்று பகைகெடுக்கும் நின்கையில் வேல்போற்றி,'
என்றென்றுன் சேவகமே ஏத்திப் பறைகொள்வான்
இன்றுயாம் வந்தோம், இரங்கேலோ ரெம்பாவாய்.

'anriv vulagam alanthaay! adiborri,
Senrangkudh thennilangkai serraay! thiralporri,
Ponras sagadam udhaidhthaay! pugazhporri
Kanru kunilaa erinthaay! kazhalporri,
Kunru kudaiyaa edudhthaay! kunamporri,
Venru pagaigedugkum ninkaiyil velporri,'
Enrenrun sevagame edhthib paraigolvaan
Inruyaam vanthom, irangkelo rempaavaay.

25 ஒருத்தி மகனாய்ப் பிறந்து,ஓ ரிரவில்
ஒருத்தி மகனாய் ஒளித்து வளர,
தரிக்கிலா னாகித் தான்தீங்கு நினைந்த
கருத்தைப் பிழைப்பித்துக் கஞ்சன் வயிற்றில்
நெருப்பென்ன நின்ற நெடுமாலே! உன்னை
அருத்தித்து வந்தோம்: பறைதருதி யாகில்,
திருத்தக்க செல்வமும் சேவகமும் யாம்பாடி
வருத்தமும் தீர்ந்து மகிழ்ந்தேலோ ரெம்பாவாய்.

Orudhthi maganaayp piranthu,o riravil
Orudhthi maganaay olidhthu valara,
Tharigkilaa naagidh thaantheengku ninaintha
Karudhthaib pizhaibpidhthug kanjsan vayirril
Nerubpenna ninra nedumaale! unnai
Arudhthidhthu vanthom: paraidharudhi yaagil,
Thirudhthagka selvamum sevagamum yaampaadi
Varudhthamum theernthu magizhnthelo rempaavaay.

26 மாலே! மணிவண்ணா! மார்கழிநீ ராடுவான்
மேலையார் செய்வனகள் வேண்டுவன கேட்டியேல்,
ஞாலத்தை எல்லாம் நடுங்க முரல்வன
பாலன்ன வண்ணத்துன் பாஞ்ச சன்னியமே
போல்வன சங்கங்கள், போய்ப்பா டுடையனவே
சாலப் பெரும்பறையே, பல்லாண் டிசைப்பாரே,
கோல விளக்கே, கொடியே, விதானமே,
ஆலின் இலையாய்! அருளேலோ ரெம்பாவாய்.

Maale! manivannaa! maarkazhinee raaduvaan
Melaiyaar seyvanagal ventuvana kedtiyel,
Njaaladhthai ellaam nadungka muralvana
Paalanna vannadhthun paanjsa sanniyame
Polvana sangkangkal, poyppaa tudaiyanave
Saalab perumparaiye, pallaan tisaibpaare,
Kola vilagke, kodiye, vidhaaname,
Aalin ilaiyaay! arulelo rempaavaay.

27 கூடாரை வெல்லும்சீர்க் கோவிந்தா! உன்தன்னைப்
பாடிப் பறைகொண்டு யாம்பெறு சம்மானம்
நாடு புகழும் பரிசினால் நன்றாக,
சூடகமே தோள்வளையே தோடே செவிப்பூவே
பாடகமே என்றனைய பல்கலனும் யாம்அணிவோம்;
ஆடை உடுப்போம்; அதன்பின்னே பாற்சோறு
மூட,நெய் பெய்து முழங்கை வழிவாரக்
கூடி யிருந்து குளிர்ந்தேலோ ரெம்பாவாய்.

Koodaarai vellumseerk kovinthaa! unthannaib
Paadib paraigontu yaamperu sammaanam
Naadu pugazhum parisinaal nanraaga,
Soodagame tholvalaiye thode sevibpoove
Paadagame enranaiya palkalanum yaamanivom;
Aadai udubpom; adhanpinne paarsoru
Mooda,ney peythu muzhangkai vazhivaarag
Koodi yirunthu kulirnthelo rempaavaay.

28 கறவைகள் பின்சென்று கானம்சேர்ந் துண்போம்!
அறிவொன்றும் இல்லாத ஆய்க்குலத்து உன்தன்னைப்
பிறவி பெறுந்தனை புண்ணியம் யாமுடையோம்;
குறைவொன்றும் இல்லாத கோவிந்தா! உன்தன்னோடு
உறவேல் நமக்கிங் கொழிக்க ஒழியாது!
அறியாத பிள்ளைகளோம் அன்பினால் உன்தன்னைச்
சிறுபேர் அழைத்தனவும் சீறி அருளாதே;
இறைவா! நீ தாராய் பறையேலோ ரெம்பாவாய்.

Karavaigal pinsenru kaanamsern thunpom!
Arivonrum illaadha aaykkuladhthu unthannaib
Piravi perunthanai punniyam yaamudaiyom;
Kuraivonrum illaadha kovinthaa! unthannodu
Uravel namagking kozhigka ozhiyaadhu!
Ariyaadha pillaigalom anpinaal unthannais
Siruber azhaidhthanavum seeri arulaadhe;
Iraivaa! nee thaaraay paraiyelo rempaavaay.

29 சிற்றஞ் சிறுகாலை வந்துன்னைச் சேவித்துன்
பொற்றா மரையடியே போற்றும் பொருள்கேளாய்:
பெற்றம்மேய்த் துண்ணும் குலத்தில் பிறந்துநீ
குற்றேவல் எங்களைக் கொள்ளாமல் போகாது;
இற்றைப் பறைகொள்வான் அன்றுகாண், கோவிந்தா!
எற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும் உன்தன்னோடு
உற்றோமே ஆவோம்; உனக்கேநாம் ஆட்செய்வோம்;
மற்றைநம் காமங்கள் மாற்றேலோ ரெம்பாவாய்.

Sirranj sirugaalai vanthunnais sevidhthun
Porraa maraiyadiye porrum porulkelaay:
Perrammeyth thunnum kuladhthil piranthunee
Kurreval engkalaig kollaamal pogaadhu;
Irraib paraigolvaan anrugaan, kovinthaa!
Erraigkum ezhezh piravigkum unthannodu
Urrome aavom; unagkenaam aadseyvom;
Marrainam kaamangkal maarrelo rempaavaay.

30 வங்கக் கடல்கடைந்த மாதவனைக் கேசவனை,
திங்கள் திருமுகத்துச் சேயிழையார் சென்றிறைஞ்சி
அங்கப் பறைகொண்ட ஆற்றை, அணிபுதுவைப்
பைங்கமலத் தண்தெரியல் பட்டர்பிரான் கோதைசொன்ன
சங்கத் தமிழ்மாலை முப்பதும் தப்பாமே
இங்கிப் பரிசுரைப்பார், ஈரிரண்டு மால்வரைத்தோள்
செங்கண் திருமுகத்துச் செல்வத் திருமாலால்
எங்கும் திருவருள்பெற் றின்புறுவ ரெம்பாவாய்.

Vangkag kadalkadaintha maadhavanaig kesavanai,
Thingkal thirumugadhthus seyizhaiyaar senrirainjsi
Angkab paraigonta aarrai, anibudhuvaib
Paingkamaladh thantheriyal padtarpiraan kodhaisonna
Sangkadh thamizhmaalai mubpadhum thabpaame
Ingkib parisuraibpaar, eerirantu maalvaraidhthol
Sengkan thirumugadhthus selvadh thirumaalaal
Engkum thiruvarulper rinpuruva rempaavaay.

Text checked against: Sri Tiruppavai - Tiruvempavai, ed. P. Sri. (P. Sri Acharya), Tirumala-Tirupati Devasthanams, Tirupati, 1957 (with padavurai and vilakkam, not collected); Tamil Nadu Government library copy (Acc. No. 1729), Koviloor Adheenam stamp. Meanings, audio and all scripts at nityapaath.com/tiruppavai/